**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஸ்ரீரங்கம்,**

**முன்னிலை : திரு.K.விஜய் ராஜேஷ், எம்.எல்.,**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், ஸ்ரீரங்கம்.**

**2024–ம் ஆண்டு மார்ச் திங்கள் 20–ஆம் நாள், புதன்கிழமை**

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 54/2019**

**CNR.NO.TNTP190001649 2019**

| | |
|---|---|
| குற்றமுறையிடுபவர் | அரசுக்காக பெட்டவாய்த்தலை காவல் நிலையம் , காவல் ஆய்வாளர் அவர்கள், குற்ற எண்.74/2015 |
| குற்றஞ்சாட்டப்பட்டவர் | எதிரி : 1.திரு. மகேந்திரன் (எ) அய்வு, (வயது 50/14) த/பெ.மொட்டையாண்டி (இறப்பு)<br>2.திரு. எழிலரசு, த/பெ. சுந்தரம் ., வயது (23/14)<br>3.திரு. கண்ணாயிரம்., (எ) நாகராஜ்., த/பெ.பழனிவேல் வயது (28/14)<br>4.திரு. சற்குணம்., த/பெ. மணி., வயது (25/14) |
| குற்றப்பிரிவு | இ.த.ச. பிரிவு 294(b) 323. 326. 506(2) |
| வனையப்பட்டது | இதச பிரிவு 294(b) 323. 326. 506(2) |
| தண்டிக்கப்பட்டது | **எதிரிகள் ஆஜர் . திறந்த நீதிமன்றத்தில் தீர்ப்புரை பகரப்பட்டது .**<br>**இறுதியாக , அரசு தரப்பில் 2.3 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(b),323,506(2)–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்தார்கள் என அரசு தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யாததால் சந்தேகத்தின் பலனை 2,3 எதிரிகளுக்கு வழங்கி 2,3 எதிரிகளை குற்றவாளி இல்லையென முடிவு செய்தும் , 4 ம் எதிரி மீது இதச பிரிவு 294(b), 326, 506(2) –ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்தார்கள் என அரசு தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யாததால் 4 ம் எதிரிக்கு வழங்கியும் 4 ம் எதிரி குற்றவாளி** |

VERDICTUM.IN

| | |
|---|---|
| | **இல்லையென முடிவு செய்தும் 1வது எதிரி இறந்துவிட்டதால் 1வது எதிரியை இவ்வழக்கிலிருந்து விடுவித்தும் கு /வி/மு/ச 248(1)–ன் கீழ் 2 முதல் 4 எதிரிகளை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது .** |
| தீர்மானம் | எதிரிகள் குற்றவாளி இல்லை |

குற்றம்சாட்டப்பட்டவர் விபரம்

| வ. எண் | பெயர் | த/பெ. | மதம் | தொழில் | குடியிருப்பு | வயது |
|---|---|---|---|---|---|---|
| 1 | திரு. மகேந்திரன் (எ) அய்வு (இறப்பு) | திரு.மொட்டை யாண்டி | இந்து | கூலி | மலையப்ப நகர் சிறுகமணி | 50/14 |
| 2 | திரு.எழிலரசு, | திரு.சுந்தரம் | இந்து | கூலி | மலையப்ப நகர், சிறுகமணி | 23/14 |
| 3. | திரு.கண்ணாயிரம் (எ) நாகராஜ் | திரு.பழனிவேல் | இந்து | கூலி | மாரியம்மன் கோவில் தெரு பணையங்குறிச்சி. | 28/14 |
| 4. | திரு.சற்குணம் | திரு.மணி | இந்து | கூலி | கீழ சிந்தலவாடி, லாலாபேட்டை | 25/14 |

தேதி விவரங்கள்:–

| | | |
|---|---|---|
| நிகழ்வு நாள் | : | 11.02.2014 |
| புகார் | : | 12.02.2024 |
| கைது தேதி | : | – |
| பிணை விடுவிப்பு | : | – |
| Committal | : | N.A |
| விசாரணை துவக்கம் | : | 18.11.2021 |
| விசாரணை முடிவு | : | 20.03.2024 |
| எதிரி காவலில் இருந்த | : | N.A |

WEB COPY

| | | |
|---|---|---|
| நாட்கள் | | |
| இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட தேதி | : | 16.11.2017 |
| Date of Questioning | : | 18.11.2021 |
| இடையீட்டு மனுக்கள் மற்றும் அதன் முடிவு | : | U/s.438 of Crpc bail petition allowed on. 21.02.2014 (Hon'ble Principal District Court Trichy) |
| சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்த தேதிகள் | : | PWs Chief — Cross<br>(1) 15.02.2024 — –<br>(2) 15.02.2024 — –<br>(3) 15.02.2024 — –<br>(4) 15.02.2024 — 15.02.2024 |
| சட்டப்பிரிவு 313(1)(b) கு.வி.மு.ச – விசாரணை தேதி | : | 13.03.2024 |
| தலைமறைவு எதிரிகளின் விபரம் அவர்கள் கைது செய்த விவரம் ஆஜர்படுத்தப்பட்ட விபரம் | : | Nil |
| மேலவை நீதிமன்றங்களால் தடையாணை வழங்கப்பட்ட விவரம் அதன் முடிவு | : | Nil |
| காலதாமதத்திற்கான காரணம் | : | Nil |

இவ்வழக்கானது 16.11.2017–ம் தேதியில் குற்றவியல் நீதித்துறை நடவர் எண் .3 திருச்சிராப்பள்ளியில் பட்டிகை வழக்கு எண் .58/2017 ஆக கோப்புக்கு எடுக்கப்பட்டு பின்னர்ஸ்ரீரங்கம் மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு ஸ்ரீரங்கம் நீதிமன்றத்தில் பட்டிகை வழக்கு எண் .54/2019 கோப்புக்கு எடுக்கப்பட்டு என் முன்பாக இறுதியாக 20.03.2024–ம் தேதியன்று விசாரணைக்கு வரப்பெற்று, அரசு தரப்பில் **உதவி வழக்குரைஞர் நிலை 2 அவர்களும்**, எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.S.மகேஷ்குமார்., பி.ஏ.பி.எல்.,** அவர்களும் ஆஜராகி செய்த வாதுரைகளை கேட்டும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும் ...

WEB COPY

WEB COPY

**தீர்ப்புரை**

இவ்வழக்கானது புகார்தாரரால் குற்றவியல் விசாரணை முறைச்சட்டப்பிரிவு 173(2)–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கையின்படி எழுந்த வழக்காகும்.

2. **குற்ற முறையீட்டாளரின் சுருக்கம்:–**

கடந்த 11.02.2014 ம் தேதி 20.00 மணிக்கு செல்வராஜ் என்பவரது பிரியாணி கடையில் வாதி செல்வம் (எ) ராஜகோபால் பிரியாணி சாப்பிடுவதற்காக நின்றுகொண்டிருந்தபோது எதிரிகள் மூவரும் ஒன்று சேர்ந்து வாதியின் மீது மோதியுள்ளார்கள் அப்போது வாதி 1 வது எதிரியை பார்த்து ஏன் பார்த்து போகக்கூடாதா என்று கேட்டதும் . 1 முதல் 4 வரையுள்ள எதிரிகள் சேர்ந்து அப்படிதாண்டா மோதுவோம் நாங்க வந்தா தள்ளி நிக்கனும்டா தாயோளி என்று தகாத வார்த்தையால் திட்டியுள்ளார்கள் A3 எதிரியானவர் தன் கையில் வைத்திருந்த பீர் பாட்டிலால் வாதியை அடித்து வாதிக்கு கொடுங்காயத்தை ஏற்படுத்தி உள்ளார் . A1, A2, A4 ,இவர்கள் வாதியை கையால் அடித்துள்ளார்கள் எதிரிகள் 1 முதல் 4 வரையுள்ள அனைவரும் சேர்ந்து எங்கள் கண்ணில் பட்டால் உன்னை அடித்து கொல்லாமல் விடமாட்டோம் என்று மிரட்டிய செய்கையானது 294(b), 323, 326, 506(2) of IPC கீழ் குற்றம் என்று இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

3. இவ்வழக்கின் இறுதி அறிக்கையை இந்நீதிமன்றம் பரிசீலனை செய்து எதிரி மீது பிரிவு 294(b), 323, 326, 506(2) of IPC ன் கீழ் நடவடிக்கை தொடர போதிய முகாந்திரம் இருந்ததால் வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது . அழைப்பாணையின் பேரில் ஆஜரான எதிரிக்கு கு .வி.மு.ச பிரிவு 207–ன் படி வழக்கு ஆவணங்களின் நகல் இலவசமாக வழங்கப்பட்டு எதிரிக்கு போதிய அவகாசம் கொடுத்து எதிரி மீது பிரிவு294(b), 323, 326, 506(2) of IPC –ன் கீழ் குற்றச்சாட்டு குறித்து வினவியபோது எதிரி குற்றத்தை மறுத்தார். அரசு தரப்பு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. **விசாரணை**:–

அரசு தரப்பில் அ .சா.1 முதல் அ.சா 4 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளது . அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ. 8 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது . எதிரி தரப்பில் சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

5. **அரசு தரப்பு சாட்சியத்தின் சுருக்கம்** :–

(1) அ.சா.1 திரு– செல்வராஜ் தனது சாட்சியத்தில் பட்டியல் சாட்சி –1 செல்வம் அவரது பக்கத்து வீட்டுகாரர் அண்ணன் முறை வேண்டும். எதிரிகளை தெரியும் எதிரி எழிலரசன் மலையப்ப நகரை சார்ந்தவர் மற்ற எதிரிகள் அவருடன் வந்துபோதனால் தெரியும் தேதி ஞாபகம் இல்லை சுமார் 10 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் பட்டியல் சாட்சி –1 ஆஜர் எதிரிகள் அனைவரும் போதையில் இருந்தனர் செல்வத்திற்கும் எதிரிகளுக்கும் வாய்தகராறு ஏற்பட்டது. அப்போது அறிவு என்பவர் தனியாக நின்றுகொண்டிருந்தார். அப்போது இருவரும் கின்டலாக பேசிக்கொண்டிருந்தனர் மற்றப்படி எனக்கு வேறு எதுவும் தெரியாது . போலீசார் விசாரிக்கவில்லை.என்றும் அ.சா.1 சாட்சியம் அளித்துள்ளார்.

(2) அ.சா.2.திரு.வெங்கடேசன் தனது சாட்சியத்தில்செல்வம் (எ) ராகோபால் என்பவர் அவரது உடன் பிறந்த அண்ணண். அவர் தற்போது இறந்துவிட்டார். அவர் உடல்நிலைய சரியில்லாமல் இறந்துவிட்டார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும் . கடந்த 10 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் திருச்சி அரசு மருத்துவமனைக்கு சென்று அவரது அண்ணன் பட்டியல் சாட்சி –1 அவரை சென்று பார்த்தேன். தகராறு என்று கேள்விபட்டு சென்று பார்த்தேன் பார்க்கும்போது அவரது தலையில் காயம் இருந்தது . பிறகு நான் எனது அண்ணனிடம் கேட்டபோது ஆஜர் எதிரிகள்தான்அடித்தார்கள் என்று சொன்னார் . சாப்பிடும்போது ஏற்பட்ட பிரச்சனையில் அடித்தார்கள் என்று சொன்னார் . பார்வை மகஜரில் உள்ள 1 வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். போலீசார் என்னிடம் மருத்துவமனையில் இருக்கும்போது கை யெழுத்து வாங்கினர். என்னுடன் எனது மாமா பனையடி என்பவரும் கையெழுத்து செய்தார் . போலீசார் வந்து என்னை விசாரணை செய்தனர்.என்றும் அ.சா.2 சாட்சியம் அளித்துள்ளார்.

(3) அ.சா.3.திரு– பணையடி தனது சாட்சியத்தில் பட்டியல் சாட்சி –1 செல்வம் (எ) ராஜகோபால் அவரது மச்சுனன் என்றும் பார்வை மகஜர் ஆவணத்தில் உள்ள 1 வது கையெழுத்து என்னுடையதுதான்.என்றும் போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை அ .சா.3 சாட்சியம் அளித்துள்ளார்.

(4) அ.சா.4. திரு. செல்வராஜ் தனது சாட்சியத்தில் பெட்டவாய்த்தலை காவல் நிலையத்தில் உதவி ஆய்வளராக பணியில் இருந்தபோது கடந்த 12.02.2014 ம் தேதி நான் நிலைய

WEB COPY

பொறுப்பில் இருந்தபோது திருச்சி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் மருத்துவமனை சென்று சிகிச்சையில் இருந்த துரை ஹரிசங்கர் என்பவரது மகன் செல்வம் (எ) ராஜகோபால் என்பவரை விசாரணை செய்து புகார் வாக்குமூலம் பெற்றும் விசாரணையின் அடிப்படையில் நிலைய குற்ற எண் . 32/2014 சட்டப்பிரிவுகள் 294(பி), 323, 324, 506(2) இதசன்கீழ் முதல் தகவல அறிக்கை பதிவு செய்தேன் .பின்னர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் வெங்கடேசன் , பணையடி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வை யிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிா =ரி வரைபடம் தயார் செய்தேன். பின்னர் மேற்படி சாட்சிகள் முன்னிலையில் அன்றைய தினமே 16.30 மணிக்கு பெருகமணி காந்திசிலை முன்பு எதிரிகள் பட்டியல் சாட்சி –1 யை தாக்கிய உடைந்த பீர் பாட்டில் மூன்று துன்டுகள் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றியும் . பின்னர் சாட்சிகள் செல்வம் (எ) ராஜகோபால் ,செல்வராஜ், தனபால், வெங்கடேசன், பனையடிஆகீயோர்களை தனிதனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன் பின்னர் காயம்பட்ட பட்டியல் சாட்சி –1 செல்வம் (எ) ராஜகோபால் என்பவருக்கு சிகிச்சை அளித்த திருச்சி அரசு மருத்துவமனை மருத்துவர் திருமதி. மகாலட்சுமி என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து மருத்துவரிடமிருந்து காயம்பட்ட நபருக்கு விபத்து பதிவேட்டுடன் கூடிய காய கருத்துரை சான்று பெற்றேன் .அந்த காய கருத்துரை சான்று கொ'டுங்காயம் என் மருத்துவர் சான்று அளித்தார் . பின்னர் வழக்கில் எதிரிகள் மகேந்திரன் (எ) அய்வு, எழிலரசு , கண்ணாயிரம் , சற்குணம் ஆகியோகளை தேடிவ ந்த நிலையில் எதிரிகள் அனைவரும் திருச்சிராப்பள்ளி மாவட்ட முதன்மை அம்ர்வு நீதிமன்றத்தில் முன் பிணை பெற்றதால் கைது செய்யப்படவில்லை.. பின்னர்பட்டியல் சாட்சி –1 ன் காயத்தின் தன்மைக்கேற்ப சட்டப்பிரிவுகள் 294(பி), 323, 324, 506(2)இதச என்பதலிருந்து 294(பி), 323, 326, 506(2)இதசஆக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன் அந்த சட்ட பிரிவு மாறுதல்அறிக்கை பின்னர் புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்தேன். என்றும் அ.சா.4 சாட்சியம்அளித்துள்ளார்.

6. **கு.வி.மு.ச பிரிவு 313–ன் படியான நடவடிக்கை:–**

அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாகத் தோன்றிய சந்தர்ப்பங்கள் குறித்து கு .வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)–ன் படி கேள்விகள் கேட்க , எதிரி அதை மறுத்துக் கூறினார். எதிரி தரப்பில் சாட்சியம் எதுவும் முன்வைக்கப்படவில்லை . இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது.

7. **தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை:–**

WEB COPY

இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டியது எதிரிகள் மீது இசத பிரிவு 294(b), 323, 326, 506(2) of IPC –ன் கீழ் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா ? என்பதேயாகும்.

8. **தீர்வு** :–

I) கடந்த 11.02.2014 ம் தேதி 20.00 மணிக்கு செல்வராஜ் என்பவரது பிரியாணி கடையில் வாதி செல்வம்(எ) ராஜகோபால் பிரியாணி சாப்பிடுவதற்காக நின்றுகொண்டிருந்தபோது எதிரிகள் மூவரும் ஒன்று சேர்ந்து வாதியின் மீது மோதியுள்ளார்கள் அப்போது வாதி 1வது எதிரியை பார்த்து ஏன் பார்த்து போகக்கூடாதா என்று கேட்டதும். 1 முதல் 4 வரையுள்ள எதிரிகள் சேர்ந்து அப்படிதாண்டா மோதுவோம் நாங்க வந்தா தள்ளி நிக்கனும்டா தாயோளி என்று தகாத வார்த்தையால் திட்டியுள்ளார்கள் A3 எதிரியானவர் தன் கையில் வைத்திருந்த பீர் பாட்டிலால் வாதியை அடித்து வாதிக்கு கொடுங்காயத்தை ஏற்படுத்தி உள்ளார் . A1, A2, A4 , இவர்கள் வாதியை கையால் அடித்துள்ளார்கள் எதிரிகள் 1 முதல் 4 வரையுள்ள அனைவரும் சேர்ந்து எங்கள் கண்ணில் பட்டால் உன்னை அடித்து கொல்லாமல் விடமாட்டோம் என்று மிரட்டிய செய்கையானது 294(b), 323, 326, 506(2) of IPC ன்கீழ் குற்றம் என்பது அரசு தரப்பு வழக்காகும்.

ii) அ.சா.1 புகார் சாட்சியான செல்வராஜ் தனது சாட்சியத்தில் ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும், ஆஜர் எதிரிகளுக்கும் செல்வத்திற்கும் வாய்தகராறு ஏற்பட்டதாகவும், அறிவு என்பவர் தனியாக நின்றுகொண்டிருந்தபோத இருவரும் கின்டலாக பேசிக்கொண்டிருந்தனர் என்றும், சம்பவத்தை பற்றி தனக்கு வேறு எதுவும் தெரியாது என்று சாட்சியம் அளித்துவிட்டு , அரசு தரப்பு சாட்சியத்தல் பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டுள்ளார்.

iii) அ.சா.2 மற்றும் அ.சா. 3 பார்வை மகசர் சாட்சி முதல் விசாரணையில் போலீசார் தன்னிடம் மருத்துவமனையில் இருக்கும் போது கையெழுத்து வாங்கினார் என்றும் அ .சா.2 பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து தன்னுடையது தான் என்றும், அ.சா.3 பார்வை மகஜர் ஆவணத்தில் உள்ள முதலாவது கையெழுத்து தன்னுடையது தான் என்றும் சாட்சியம் அளித்து , அரசு தரப்பு சாட்சியத்தில் பிறழ் சாட்சிகளாக பாவிக்கப்பட்டுள்ளார்.

iv) அ.சா.4 உதவி ஆய்வாளர் சாட்சியத்தை உறுதியூட்டு விதமாக தனிநபர் சாட்சியம் அளிக்கவில்லை, புகார்தாரர் அ.சா.1 சந்தேகத்தின் பேரில் புகார் கொடுத்துள்ளதாக சாட்சியம் அளித்துள்ளதால் எதிரிகளுக்கு எதிரான அரசு தரப்பு குற்றச்சாட்டுகளை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை. எனவே சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி

WEB COPY

எதிரிகளை இந்த வழக்கில் இருந்து விடுதலை செய்ய இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

iii) அ.சா.4 விசாரணை அதிகாரி சாட்சியத்தின் அடிப்படையில் மட்டும் எதிரி குற்றவாளி என்று தீர்மானிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

இறுதியாக, அரசு தரப்பில் 2, 3 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(b),323,506(2)–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்தார்கள் என அரசு தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யாததால் சந்தேகத்தின் பலனை 2,3 எதிரிகளுக்கு வழங்கி 2,3 எதிரிகளை குற்றவாளி இல்லையென முடிவு செய்தும் , 4ம் எதிரி மீது இதச பிரிவு 294(b), 326, 506(2) –ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்தார்கள் எனஅரசு தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யாததால் 4ம் எதிரிக்கு வழங்கியும் 4ம் எதிரி குற்றவாளி இல்லையென முடிவு செய்தும் 1வது எதிரி இறந்துவிட்டதால் 1வது எதிரியை இவ்வழக்கிலிருந்து விடுவித்தும் கு /வி/மு/ச 248(1)–ன் கீழ் 2 முதல் 4 எதிரிகளை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது .

எதிரி எழுதிக் கொடுத்துள்ள பிணையப்பத்திரமும் மேல்முறையீட்டு காலத்திற்கு பின் ரத்தாகிவிடும் என்று இந்நீதிமன்றம் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் திருத்தம் செய்யப்பட்டு, 2024–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 20 ஆம் நாளாகிய இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

(ஓம்.K.விஜய் ராஜேஷ்)
மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
ஸ்ரீரங்கம்.

WEB COPY

இணைப்பு :

**அரசு தரப்பு சாட்சிகள்:–**

அ.சா 1 : திரு.செல்வராஜ்

அ.சா 2 : திரு.வெங்கடேசன்

அ.சா 3 : திரு.பணையடி

அ.சா 4 : திரு.செல்வராஜ் (காவல் உதவி ஆய்வாளர்)

**அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள்:–**

அ.சா.ஆ. 1 : 15.02.2024 பார்வை மகஜரில் உள்ள அ.சா.3 சாட்சி கையொப்பம்

அ.சா.ஆ. 2 : 15.02.2024 பார்வை மகஜரில் உள்ள அ.சா.3 சாட்சி கையொப்பம்

அ.சா.ஆ. 3 : 15.02.2024 புகார் வாக்குமூலம்

அ.சா.ஆ. 4 : 15.02.2024 முதல் தகவல் அறிக்கை

அ.சா.ஆ. 5 : 15.02.2024 மாதிரி வரைபடம்

அ.சா.ஆ. 6 : 15.02.2024 கைப்பற்றுதல் மகஜர்

அ.சா.ஆ. 7 : 15.02.2024 விபத்து பதிவேட்டுடன்கூடிய காய கருத்தை சான்று

அ.சா.ஆ.8 : 15.02.2024 சட்ட பிரிவு மாறுதல் அறிக்கை

அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்று பொருள்கள்:–இல்லை

எதிரி தரப்பில் சாட்சிகள் :– இல்லை

எதிரி தரப்பில் சான்றாவணம் :– இல்லை

(ஓம்.K.விஜய் ராஜேஷ்)
மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
ஸ்ரீரங்கம்

நகல்கள்

1. மேதகு தலைமை நீதித்துறை நடுவர் அவர்கள், திருச்சி பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2. அரசு தரப்பில் உதவி குற்றத்துறை வழக்கறிஞர் நிலை எண்.1, ஸ்ரீரங்கம்
3. காவல் ஆய்வாளர், ஸ்ரீரங்கம் காவல் நிலையம்.

குறிப்பு

அரசு தரப்பு சாட்சிகள் யாரும் ஒரு நாளைக்கு மேல் நிற்க வைக்கப்படவில்லை.

WEBCOPY